[18th July 1962

வெளியேற்றப்பட்ட விவசாயிகள்

* 388 கேள்வி.—திரு. முனு ஆதி (திரு. கோ. சி. மணி சார்பாக) : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் உள்குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்து வந்தவர்களுக்கு, சட்டப்படிக்குள்ள உரிமைகளும், பாது காப்பும் இல்லை என்று 1958-ல் இருந்து 1962 வரை, நிலத்தி லிருந்து வெளியேற்றப்பட்ட விவசாயிகள் எத்தனை பேர் ?

THE HON. SRI V. RAMAIAH : The number of sub-tenants evicted in Thanjavur district during the years 1958 to 1961 is 3,740. Figures for 1962 are not available.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், முன்பு உள்குத்தகைக்கு இந்த நிலத்திலே இருந்தவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடை யாது. ஆகவே, இந்த வருஷமாவது இந்த நிலங்களிலே சாகு படி செய்கிறவர்களுக்கு ஒரு ஒப்படைப்புச் சீட்டு கொடுப்பதற் கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா ?

கனம் திரு. வி. ராமையா : இப்போது இருக்கக்கூடிய நிலைபடி பாதுகாப்பு கிடையாது. நாம் இதிலே இடைஞ்சலே இருக்கக் கூடாது என்று ஒரு முடிவு செய்து, அதை நமது நோக்கமாகவும் ஏற்றுக்கொண்டு இந்த ஒரு சூழ்நிலையை தீவிரமாகப் பரிசிலனை செய்து, அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது அவசியமா, அவசியம் இல்லையா என்பதைப்பற்றி தீர்க்கமாக ஆலோசித்து ஒரு முடிவு எடுக்கவேண்டுமென்றும் சமீபத்திலே அதற்காக ஒரு காம்பிர ஹென்சிவ் ஆக்டை தயாரித்து, நன்கு ஆலோசனை செய்யவேண்டு மென்றும் அரசாங்கம் நினைத்திருக்கின்றது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : மந்திரி அவர்கள் சொன்ன படி 'காம்ப்ரெஹென்ஸிவ் ஆக்ட்' சமீபத்தில் வருமா ? அல்லது இன்னும் பல வருஷங்கள் ஆகுமா ? இப்பொழுது இருக்கிற சட்டத்தில் பல சிக்கல்கள் இருப்பதினால், இந்த 'காம்ப்ரெஹென் ஸிவ் ஆக்டை' சீக்கிரம் கொண்டுவருவது பற்றி சர்க்கார் யோசிக் குமா ?

கனம் திரு. வி. ராமையா : எல்லா விவரங்களையும் சேகரம் செய்து நல்ல முடிவுகள் எடுத்தவுடனே சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீவிர முயற்சி எடுக்கும்.

பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் போதித்தல்

* 389 கேள்வி.—திரு. ர. ஜீவரத்தினம் (திரு. ஜே. மாதா கவுடர் சார்பாக) : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிக்கூடங்களில் நான்காம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் போதிக்க உத்தேசமுண்டா ?

18th July 1962]

(இ) எப்போது முதல் அமுலுக்கு வரும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) From the school year 1962–63.

திரு. க. ர. நல்லசிவம் : மாணவர்களிடையே **ஆங்கிலத்தினு**டைய தரத்தை உயர்த்துவதற்காக இந்தத் திட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறதா? அல்லது, உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொள்ளுவதற்கு முதற்படியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போதனா மொழிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. நம்முடைய மாணவர்கள் ஆங்கிலம் கற்பது அவசியம் என்று இந்த அரசாங்கம் உணர்கிறது, மாணவர்களும் வேண்டுகிறார்கள், பெற்றோர்களும் வேண்டுகிறார்கள். தொடங்குவது என்றால், நான் நேற்றுக் கூறியது போல, நான்காவது ஸ்டாண்டர்டிலிருந்து இந்த வருஷம் தொடங்கப்படும். அடுத்த ஆண்டில் மூன்றாவது ஸ்டாண்டர்டிலிருந்து தொடங்க வேண்டுமென்பதுதான் உத்தேசம். அதுதான் ஆசிரியர்களுடைய அபிப்பிராயமும், அவர்களுடைய அனுபவமும்.

MR. SPEAKER : The hon. Member, Sri C. Chiranjeevulu Naidu.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, the question that I wanted to put has already been answered by the Hon. Minister in reply to a supplementary question put by another hon. Member. I wanted to ask whether it was a fact that the Hon. Minister had stated at a meeting in Poonamallee that English would be introduced from the Third Standard. Now this question has already been answered.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Secondary Education Teachers' Association have suggested, from out of their own experience, that teaching of English should be started from the Third Standard. I have stated that we are considering that way.

* 390 *Q.*—SRI M. WILLIAM : Will the Hon. the Minister for Finance be pleased to state whether instructions have been issued to start English medium classes in the High schools?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes. Permission has been granted for English medium in some High schools for this year.

SRI M. WILLIAM : Sir, while speaking on the Demand 'Education', the Hon. Minister has stated that the English